2002 ஏப்ரல் 23] [பேரவைத் தலைவர்]

220-ன்படி இணைத்துத் தந்திருக்க வேண்டும். பிரச்சினைக்குரிய பகுதிகளை அறிவிப்புடன் இணைத்துத் தராதது, பேரவை விதி 220-க்கு முரணானது.

மேலும், இதுகுறித்து நிருபர்கள் பிரிவிலிருந்து அச்சிடப் பெறுவதற்காக வைக்கப்பட்டிருந்த 9-4-2002 நாளிட்ட நடவடிக்கைக் குறிப்புகளை நான் பார்வையிட்டேன். அதில் மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர் அவர்களது பதிலுரை முழுவதையும் படித்துப் பார்த்ததில், மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள வாக்கியத்தை, மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் தன் உரையில் கூறவில்லை. மாறாக, முன்னாள் முதல்வர் திரு. கருணாநிதி அவர்கள், மைய அரசு புலன் விசாரணையால் அவருக்கு ஏற்பட்ட அச்சத்தினால், உச்ச நீதிமன்றத்தில் இருந்த காவிரி நதி நீர் தொடர்பான வழக்கைத் திரும்பப் பெற்றுவிட்டார் என்ற பொருள்படத்தான் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதிமீது வேண்டுமென்றே உண்மைக்கு மாறாக உள்நோக்கத்தோடு, களங்கம் கற்பிக்கும் வகையில் மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் பேரவையில் பேசியுள்ளார் என்பதை ஏற்பதற்கில்லை.

மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, இப்பிரச்சினையில் அவை உரிமை மீறல் ஏதும் இல்லை என்ற எனது தீர்ப்பினைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

8. அறிவிப்புகள்

(அ) ஏற்கெனவே தீர்ப்பளிக்கப்பட்ட ஒரு பொருள் பற்றி மீண்டும் உரிமை மீறல் பிரச்சினை எழுப்ப அனுமதி மறுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் ஏற்பட்ட திரண்ட இழப்பு குறித்த புள்ளிவிவரங்களில், அரசால் வெளியிடப்பட்ட நூலில் சில தவறுகள் உள்ளதாக, மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர் க. பொன்முடி, திரு. இ. புகழேந்தி ஆகியோர் எனது கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்கள்.

[பேரவைத் தலைவர்] [2002 ஏப்ரல் 23

இப்பிரச்சினை குறித்து, நான் 16-4-2002 அன்றே தீர்ப்பளித்துள்ளேன். இப்பொழுது, மாண்புமிகு உறுப்பினர்கள் அதே பொருள் குறித்து உரிமைப் பிரச்சினை கொடுத்துள்ளனர். ஏற்கெனவே இதுகுறித்து விரிவாக நான் தீர்ப்பளித்துள்ளதால், புதிதாக எந்த விளக்கமும் தேவையில்லை. இவ்வுரிமை மீறல் பிரச்சினைக்கு அனுமதி மறுக்கிறேன்.

பேரவையில், ஓர் உரிமைப் பிரச்சினை எழுப்புவதற்கு என்னென்ன நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்று பேரவை விதி 222-ல் கொடுக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவர்.

ஓர் உரிமைப் பிரச்சினை தொடர்பாக, ஒரு பொருள் குறித்துப் பேரவைத் தலைவர் தனது தீர்ப்பினை அளித்த பிறகு, அதே பொருள் குறித்த உரிமைப் பிரச்சினை எழுப்புவது, பேரவைத் தலைவருடைய தீர்ப்பிற்கு உள்நோக்கம் கற்பிப்பதாக அமையும். இது முற்றிலும் பாராளுமன்ற நடைமுறைகளுக்கு மாறானது. பாராளுமன்றத்திலும், இதர சட்டமன்றங்களிலும் இம்முறையே கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

எனவே, வருங்காலத்தில் உறுப்பினர்கள் அனைவரும் எனது தீர்ப்பிற்குப் பின்னர் அதே பொருள் குறித்து அவையில் எழுப்புவதோ, பேசுவதோ தவிர்க்கப்பட வேண்டும் என உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைகள், தமிழ்நாடு நில மேம்பாட்டுக் குழுமத்தின் நிர்வாகக் குழு மற்றும் மாநில நூலகக் குழு ஆகியவற்றிற்கு உறுப்பினர்கள் நியமனம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கீழ்க்கண்ட பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை (Senate) களுக்கும், தமிழ்நாடு நில மேம்பாட்டுக் குழுமத்தின் நிர்வாகக் குழுவிற்கும், மாநில நூலகக் குழுவிற்கும் அவற்றின் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து முறையான நியமனத் தாள்கள் வரப்பெற்றுள்ளன:

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

ஆட்சிமன்றப் பேரவை .. திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்
செல்வி சி. கனகதாரா
திருப்பூர் திரு. சி. சிவசாமி